## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.
Prosecution witness for P.W.13.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராஜா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது கம்மாபட்டியில் குடியிருந்து காற்றாலை நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன மில்டன்ராஜ் என் மாமா. ஆஜர் எதிரியைத் தெரியும். என் மாமா ஆஜர் எதிரியின் மனைவியுடன் தவறான உறவில் இருந்ததால் ஆஜர் எதிரி அவரை கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். சூரியமினுக்கன் விலக்கில் இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொன்னார்கள். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 9 மணியளவில் அதுகுறித்து தகவல் வந்தது. தகவல் கிடைத்த பிறகு காலையில் கயத்தார் காவல்நிலையம் சென்றேன். போலீசார் அங்கிருந்த ஊர்க்காரர்களை கையொப்பமிடச் சொன்னார்கள், நானும் கையொப்பமிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

திருமங்கலகுறிச்சி கிராமத்திற்கும், சூரியமினுக்கன் கிராமத்திற்கும் சுமார் 5 கிமீ துாரம் இருக்கும். கயத்தார் காவல்நிலையத்திற்கு நான், மது, ரவி, அந்தோணி, ஆக்னேஷ்குமார் ஆகியோர் சென்றோம். ரவியின் தகப்பனார் பெயர் குரூஸ். காவல்நிலையத்தில் நாங்கள் சுமார் 25 பேர் கையொப்பமிட்டோம். மேற்படி நபர்களும் கையொப்பமிட்டார்கள். எதிரியின்

மனைவியுடன் மில்டன்ராஜ் தவறான உறவில் இருப்பதாக ஊரில் பேசிக் கொண்டார்கள். யார் என்று எனக்குத் தெரியாது. நான் குடியிருக்கும் ஊரில் உள்ள மக்களை நன்றாகத் தெரியும். அனைவரும் எனக்கு உறவினர்கள். யார் மூலம் ஆஜர் எதிரி மில்டன் ராஜை கொன்றுவிட்டதாக தெரிந்து கொண்டேன் என்றால் பெயர் தெரியவில்லை. மில்டன்ராஜிக்கும், எதிரியின் மனைவிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், மில்டன்ராஜ் என் உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும், எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:38:30 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.
Prosecution witness for P.W.14.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. பெருமாள்சாமி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தென்னம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு வெள்ளாளன்கோட்டை கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 02.02.2020 அன்று பகல் 2.30 மணியளவில் நான் அகிலாண்டபுரத்தில் வீட்டில் இருந்தபோது போலீசார் கேட்டுக் கொண்டதன்பேரில் நானும், என் உதவியாளரும் வடக்கு இலந்தகுளம் விலக்கிற்கு சென்றோம். போலீசார் எதிரியை பிடித்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ 5**. அதன் அடிப்படையில் கயத்தார் – தேவர்குளம் சாலையில் திருமங்கலகுறிச்சி ஒத்தவீடு அருகில் சாலைக்கு கிழபுறமாக இருந்த கல்லை எதிரி ஆஜர்படுத்தியதை போலீசார் மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 6**. பிறகு எதிரி கம்மாபட்டியில் நடுத்தெருவில் எங்களை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று வெள்ளை வேஷ்டி, வெள்ளை சட்டை ஆகியவற்றை ஆஜர் செய்ததை போலீசார் எங்கள் முன்பாக மகஜரில் கைப்பற்றி

எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 7**. எதிரியை கைது செய்த இடத்தில் எதிரி ஆஜர் செய்த TN 96C 1570 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஆஜர் செய்தபோது போலீசார் எங்கள் முன்பாக மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 8**. மேற்படி சட்டை மற்றும் வேட்டி **சா.பொ.1 மற்றும் 2**. மேற்படி கல் **சா.பொ.3**. மேற்படி இருசக்கர வாகனத்தின் புகைப்படங்கள் **அ.சா.ஆ 9 வரிசை** (எண்ணிக்கையில் 5). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

02.02.2020 அன்று போலீசார் கைபேசி மூலம் மில்டன்ராஜ் கொலை வழக்கில் எதிரியை பிடித்து வைத்திருப்பதாகவும், வாக்குமூலத்திற்கு ஆஜர் சாட்சியாக வரவேண்டுமென்றும் அழைத்தார்கள். போலீசார் எனக்கு தகவல் சொல்லும்போது என் உதவியாளர் அவரது வீட்டில் இருந்தார். நான் வடக்கு இலந்தகுளம் விலக்கு செல்லும்போது பிற்பகல் 3.10 மணியிருக்கும். சூரியமினுக்கன் என்பதும், திருமங்கலகுறிச்சி என்பதும் வேறு வேறு பகுதிகள் என்றால் சரிதான். 30.01.2020 ல் போலீசார் மில்டன்ராஜ் இறந்த பகுதி யாருக்கு சொந்தமானது என்று என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். 02.02.2020 அன்று போலீசாருடன் நான் சூரியமினுக்கன் கிராமத்திற்கு செல்லவில்லை. 02.02.2020 அன்று நான் போலீசாரிடம் நான்கு கையொப்பங்கள் போட்டேன். அ.சா.ஆ 8 ல் கையொப்பமிடும்போது மாலை 5.40 மணியிருக்கும். அ.சா.ஆ.6 ல் கையொப்பமிடும்போது மாலை 6.50 மணியிருக்கும். அ.சா.ஆ 7 ல் கையொப்பமிடும்போது இரவு 8.20 மணியிருக்கும். மற்றொரு கையொப்பத்தை பிற்பகல் 3.10 மணியளவில் போட்டேன். நானும், கிராம உதவியாளரும் கயத்தார் பேருந்து நிலையத்தில் 3 மணிக்கு சந்தித்துக்

கொண்டோம். கயத்தார் பேருந்து நிலையத்திலிருந்து வடக்கு இலந்தகுளம் கிராமம் சுமார் 3 கிமீ துாரத்தில் இருக்கும். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் போலீசார் எதிரியை கைது செய்யவில்லை என்றும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் போலீசார் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், போலீசார் நிலையத்திலேயே தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் நான் கையொப்பமிட்டுவிட்டு போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. கிராம பதிவேடுகளில் எந்த எந்த பகுதியில் நீர் ஓடைகளில் நீரோட்டம் உள்ளது பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். 02.02.2020 சமயத்தில் மலைக்காலத்தில் பெய்த நீரோட்டம் இருக்கும் என்றால் சரிதான். 02.02.2020 அன்று திருமங்கலகுறிச்சி ஒத்தைவீட்டு அருகில் உள்ள ஓடையில் நீரோட்டம் இருந்ததா என்றால் இல்லை. அதுகுறித்து கிராம பதிவேடுகளில் பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். அந்த பகுதியில் ஒத்தை வீட்டைத் தவிர வேறு வீடுகள் இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:38:38 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.
Prosecution witness for P.W.15.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. வேல்முருகன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது 13.02.2020 அன்று கயத்தார் காவல்நிலைய குற்ற எண் 32/2020 வழக்கு சம்பந்தப்பட்ட இறந்துபோன மில்டன்ராஜ் உடலில் இருந்த உள்ளுறுப்புகள் பிரேத பரிசோதனை சமயத்தில் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு திரு. அழகுமுத்துபாண்டியன் என்ற காவலர் ரசாயன பகுப்பாய்விற்காக எடுத்து வந்தார். இரைப்பையின் ஒரு பகுதி, சிறுகுடலின் ஒரு பகுதி, கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தின் ஒரு பகுதி மற்றும் உப்புக் கரைசல் ஆகியவற்றை மூடி முத்திரையிட்டு எங்கள் ஆய்வகத்திற்கு கொண்டு வந்தார். அவற்றை பகுப்பாய்வு செய்ததில் அவற்றில் எந்தவிதமான நச்சுத்தன்மையும் இல்லை என்று அதற்கான நச்சியல் அறிக்கை **அ.சா.ஆ 10**. போலீசார் என்னை விசாரித்தார்கள். 18.02.2020 அன்று நீதித்துறை நடுவர் 2, கோவில்பட்டி அவர்களிடமிருந்து மேற்படி காவலர் மூலமாக ஆய்விற்காக அதே குற்ற எண் சம்பந்தப்பட்ட ஆறு வழக்கு சொத்துக்கள் பகுப்பாய்விற்காக பெறப்பட்டது. அவை

சிறிதளவு ரத்தம்பட்ட, ரத்தம்படாத மண், நீலநிற கந்தலான ஜீன்ஸ் பேண்ட், கந்தலான சட்டை, கந்தலான பனியன் மற்றும் ஒரு கல் ஆகியவை மூடி முத்திரையிடப்பட்டு ஆய்வகத்தில் ஒப்படைக்கப்பட்டது. அவற்றை பகுப்பாய்வு செய்ததில் மேற்படி கல்லிலும், ரத்தம்பட்ட மண்ணிலும் ரத்தக்கறை காணப்பட்டது. அவைகள் மனித இனம் மற்றும் ரத்த வகை கண்டறிவதற்காக குருதி வடிநீரியல் பிரிவு மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. அவை இரண்டிலும் மனித வகை ரத்தம் இருந்ததாகவும், ரத்த வகை கண்டறியமுடியவில்லை என்றும் கொடுக்கப்பட்ட உயிரியல் அறிக்கை **அ.சா.ஆ 11**. மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து கொடுக்கப்பட்ட குருதி வடிநீரியல் அறிக்கை **அ.சா.ஆ 12**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

மேற்படி கல்லில் மண் துகள்கள் இருந்ததாக ஆய்வறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. கல்லில் ரத்தக்கறை படிந்த பகுதியில் மண் துகள்கள் இருந்ததாகவும் சொல்லப்படவில்லை. வேறு ஏதேனும் தூசு பொருட்கள் இருந்ததாகவும் சொல்லப்படவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:38:46 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.
Prosecution witness for P.W.16.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. செல்வமுருகன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பேராசிரியராக மற்றும் துறைத்தலைவராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு அதே மருத்துவமனையில் அதே பிரிவில் பணியில் இருந்தபோது 01.02.2020 அன்று மில்டன்ராஜ் என்பவரின் பிரேதத்தை ஆய்வாளர் கடிதத்துடன் காவலர் அழகுமுத்துப்பாண்டியன் பிரேத பரிசோதனைக்காக காலை 11.10 மணியளவில் கொண்டுவந்தார். நான் காலை 11.20 மணியளவில் பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். அப்போது பிரேதம் அழுக ஆரம்பித்த நிலையில் இருந்தது. கை, கால் விரல் நகங்கள் நீலநிறத்தில் காணப்பட்டது. பிரேதத்தின் முன்பகுதி கருமை நிறத்திலும், பகுதி காய்ந்தும் காணப்பட்டது. உடலின் முன்பகுதியில் வெள்ளை நிற புழுக்கள் இருந்தன. வலது தோள்பட்டையின் முன்புறம் இருந்த தசை பகுதி புழுக்களால் உண்ணைப்பட்டிருந்தது. மார்பின் வலதுபக்கம் வலது பக்க வலது தோள்பட்டை, கழுத்தின் வலதுபுறமுள்ள இருந்த சதை பகுதிகளி் கருமை நிறத்தில் காணப்பட்டது. கழுத்துப் பகுதியை அறுத்து பார்த்தபோது நாவடி எலும்பின் வலதுபக்கம் தைராய்டு குருத்தெலும்பின் வலதுபக்கம் மற்றும்

டிரைக்காய்டு குருத்தெலும்பின் வலதுபக்கம் உடைந்து சுற்றிலும் உள்ள சதைகள் கருமை நிறத்தில் காணப்பட்டது. எலும்புகள் உடைந்த பகுதி ஒரே நேர்கோட்டில் காணப்பட்டது.

உள்ளுறுப்புகள் அழுகிய நிலையில் இருந்தது. அவற்றை அடையாளம் காணும் நிலையில் இருந்தது. சிறுநீர்ப்பையில் 20 மிலி அளவுள்ள சிறுநீர் இருந்தது. மூளை அழுகி திரவ நிலையில் இருந்தது. உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு ரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. தலை எலும்பு சேகரிக்கப்பட்டு super imposition பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. தொடை எலும்பு சேகரிக்கப்பட்டு மரபணு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. உள்ளுறுப்புகளின் ரசாயன பரிசோதனை அறிக்கையில் உள்ளுறுப்புகளில் எந்த வித நச்சுப்பொருளும் இல்லை என்று கண்டறியப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டது. அந்த அறிக்கையை ஆய்வு செய்து மேற்படி நபர் அவரது கழுத்துப்பகுதியில் ஏற்பட்ட கூர்மையில்லாத பொருளால் ஏற்பட்ட காயத்தினாலும், மூச்சு திணறல் காரணமாக இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ 13**. இறுதியறிக்கை **அ.சா.ஆ 14**. கனத்த கல் போன்ற பொருளை ஒருவர்மீது போட்டால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

மேற்படி நபருக்கு தாடையிலோ, நெஞ்சு எலும்பிலோ எந்தவித எலும்பு முறிவும் இல்லை. மேற்படி நபர் பிரேத பரிசோதனைக்கு முன்பாக எத்தனை மணி நேரத்திற்குள் இறந்திருப்பார் என்று நான் குறிப்பிடவில்லை. பிரேத பரிசோதனையில் இரைப்பையில் மது இருந்ததாக எனக்கு தெரியவரவில்லை. பொருட்களை காட்டி ஆய்வாளர் என்னை

விசாரிக்கவில்லை. ஒரு நபர் உயரமான இடத்திலிருந்து கீழே விழும்போது அங்குள்ள கற்களோ, மரக்கிளைகளோ தொண்டை பகுதியில் படுவதால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் ஒரே நேர்க்கோட்டில் அடிபடுவதற்கு வாய்ப்பில்லை. மேற்படி மூன்று எலும்புகளும் அடிபடுவதற்கு வாய்ப்பில்லை. பிரேத பரிசோதனை சமயத்தில் அவரது உடலில் ஜீன்ஸ் பேண்ட், ஒரு பனியன் மற்றும் ஒரு சட்டை இருந்தது. அதைத் தவிர பிரேதத்தில் மோதிரம், கழுத்து சங்கிலி, கை காப்பு, முத்துமாலை போன்ற எந்த ஆபரணமும் இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:38:54 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.